Literacy for a Billion

Movie: Naalai
Year: 2006

Song: Kattabomman
Lyricist: N A Muthukumar

கட்டபொம்மன் கோட்டையிலே
கப்பம் கட்ட யாரும் இல்லே
கட்டபொம்மன் கோட்டையிலே
கப்பம் கட்ட யாரும் இல்லே
கிட்டே வந்தா சுத்தி சுத்தி
நெத்தி அடிதான்

நட்டை போல வாழ்க்கையைதான்
டைட்டா நீயும் வெச்சுக்கணும்
லூஸா போனா எப்பவுமே
சுத்தி அடிதான்
கையின்னு இருந்தா கொடுக்கணும்
டா
காலுன்னு இருந்தா குதிக்கணும்டா
கண்ணுன்னு இருந்தா பார்க்கணும்
டா
கன் என்று இருந்தா வெடிக்கணும்
டா
வெட்டி சாய்ப்பது இங்கே
வாடிக்கை
நீயும்தான் தட்டி
கேட்டுப்புட்டா வேடிக்கை
போனா போ பொழைச்சிக்கோ
போடா போ
ஓடிப்போய் ஒளிஞ்சுக்கோ
ஓ யா மாமே ஓ யா மாமே
ஓ யா மாமே ஓ யா மாமே
ஓ யா மாமே

தொப்புள்கொடியை
நறுக்கும்போதே
கத்தி வாசம் பார்த்தோம்
அய்யோ துப்பு கெட்ட வயசில்
நாங்க
துப்பாக்கியை தொட்டோம்

நீ கடல் தூக்கி போட்டாலும்
மேலே மிதந்து வருவோம்
வியூகம் போட்டு பார்த்தாலும்
வெளியே ஒடைச்சி வருவோம்
தூங்கும்போதும் காலை ஆட்டி
தூங்கும் வாழ்க்கை இங்கே
தப்பி தவறி கோட்டை விட்டா
வெட்டிடுவான் நுங்கை
யார் எந்தப் பக்கம் போனாலும்
இங்கேருந்தே பார்ப்போம்
எந்த தப்பு செய்தாலும்
இங்கேருந்தே கேட்போம்
அந்த எரிமலைக்கே
நாங்கள் நெருப்பு கொடுப்போம்
வேகம் காரமாத்தான்
நாங்க காபி குடிப்போம்

நெருப்பை காட்டி குதிக்க
சொன்னா
நட்புக்காக செய்வோம்
வெறுப்பை காட்டி விலகச்
சொன்னா
வேரோடத்தான் கொய்வோம்
இது இரவில் ஆடும் சூதாட்டம்
விதிகள் ஏதும் இல்லை
தினமும் இங்கே போராட்டம்
பயந்தால் வெற்றி இல்லே
நிலவை காட்டி சோறு ஊட்ட
சொந்தம் அன்பு இல்லே
ரத்தம் காட்டி சோறு தின்னு
வாழ்ந்தது ரெண்டு பிள்ளை
இது நிழல்கள் காணும் ராஜாங்கம்
நிஜத்தை நோண்டுவதில்லே
நெஞ்சில் குத்தும் சட்டைக்கு
இதயம் என்பது இல்லே

அந்த எரிமலைக்கே
நாங்கள் நெருப்பு கொடுப்போம்
வேகம் காரமாத்தான்
நாங்க காபி குடிப்போம்
கட்டபொம்மன் கோட்டையிலே
கப்பம் கட்ட யாரும் இல்லே
கிட்டே வந்தா சுத்தி சுத்தி
நெத்தி அடிதான்
நட்டை போல வாழ்க்கையைதான்
டைட்டா நீயும் வெச்சுக்கணும்
லூஸா போனா எப்பவுமே
சுத்தி அடிதான்
கையின்னு இருந்தா கொடுக்கணும்
டா
காலுன்னு இருந்தா குதிக்கணும்டா
கண்ணுன்னு இருந்தா பார்க்கணும்
டா
கன் என்று இருந்தா வெடிக்கணும்
டா
வெட்டி சாய்ப்பது இங்கே
வாடிக்கை
நீயும்தான் தட்டி
கேட்டுப்புட்டா வேடிக்கை
போனா போ பொழைச்சிக்கோ
போடா போ
ஓடிப்போய் ஒளிஞ்சுக்கோ
ஓ யா மாமே ஓ யா மாமே
ஓ யா மாமே ஓ யா மாமே
ஓ யா மாமே

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.